பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 11 (23—4—68) செவ்வாய் ★ வெளியூர்: சித்திரை 12 (24—4—68) புதன் [இதழ்: 259

## எச்சரிக்கை!

"தற்போதைய நிலையில், நீதி மன்ற நடவடிக்கைகளை இந்தியில் நடத்த ஏற்பாடு செய்தால் நாடே உடைந்து சிதறி விடுவது உறுதி"

என்று இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. கஜேந்திர கட்கார் எச்சரிக்கை செய்துள்ளார்.

"இந்தியை எவர்மீதும் திணிக்கக்கூடாது; ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பிடிக்கும் வரை ஆங்கிலமே நீடித்திருக்க அனுமதிக்க வேண்டும்."

# சனநாயகத்துக்குப் பேராபத்து

## காங்கிரசு ஆட்சியின் வரைமுறையற்ற செயல்

### 'இன்று எங்களை மிரட்டுவது நாளை காங்கிரசாரை மிரட்டலாம்'— மக்கள் சபையில் இரா. செழியன் எச்சரிக்கை

"ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொருவிதமான கோட்பாட்டை கவர்னர்கள் பயன்படுத்துகின்றனர்; இராஜஸ்தானில் சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது; அரியானுவில் சட்டமன்றம் கலைக்கப்பட்டது; மேற்கு வங்காளத்தில், அமைச்சரவை மாற்றப்பட்டது; உத்தரப் பிரதேசத்தில் சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது—கடைசியாகக் கலைக்கப்பட்டுவிட்டது!

"முன்பொரு தடவை பேசியபொழுது, 'மாநிலத்துக்கு மாநிலம் வரைமுறை மாறுகிறது; பலதரப்பட்ட வரைமுறை இருக்கிறது' எனக் கூறினேன்; இப்பொழுது யோசித்துப் பார்க்கும்பொழுது, நான் கூறியதை மாற்றிக் கொள்கிறேன். 'பலதரப்பட்ட வரைமுறை' என்பது சரியல்ல; வரைமுறை என்பதே இவர்களிடம் கிடையாது! ஒரே ஒரு வரைமுறைதான் இருக்கிறது; அது, 'எப்படியாவது—எந்த முறையைக் கையாண்டாவது—காங்கிரசுக் கட்சியை ஆட்சிபீடத்தில் அமர்த்தவேண்டும்' என்பதுதான்! காங்கிரசுக் கட்சியால் முடியவில்லை என்றுல்தான், 'குடியரசுத் தலைவர் ஆட்சி', 'இடைத் தேர்தல்' எல்லாம்!

"நாடாளுமன்ற சனநாயக முறைக்கு இது ஒரு சோதனை! உத்தரப் பிரதேசத்திலோ, மற்றும் எந்த மாநிலத்திலோ, 'யார் ஆட்சிக்கு வருவது' என்பது முக்கியமானதல்ல; 'எந்த வரைமுறையின்கீழ் பெரும்பான்மையை முடிவுசெய்வது—அமைச்சரவைகளை மாற்றுவது' என்பவைகளுக்குச் சரியான விடை காணவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு எந்தப் பங்கும் கிடையாதா? 'இராஜ்பவன'த்து கவர்னரின் சொந்தக் கருத்துப் போதுமானதா?—என்பதை அரசாங்கம் வரையறுக்க வேண்டும்.

"இது. சனநாயக முறையை நிர்ணயிக்கும் பிரச்சினை. இன்றைக்கு எதிர்க் கட்சிகளை மிரட்டுகிற இந்தப் பிரச்சினை, 1972-க்குப் பின் காங்கிரசுக் கட்சிக்காரர்களை மிரட்டலாம்; எனவே, எல்லோருக்கும் பொதுவாக—சனநாயகத்தின் எதிர்கால வளர்ச்சி கருதி—இந்தப் பிரச்சினைக்கு நாம் விடை காண வேண்டும்"

என்று, நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் வற்புறுத்தினர். உ. பி. மாநிலச் சட்டமன்றம் கலைக்கப்படடுக் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டதைக் கண்டிக்கும்வகையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் செழியன் அவர்கள் பேசினர். அவர் ஆற்றிய உரை வருமாறு:—

### வெளிநடப்பில் தி.மு.க.— நிலைமை விளக்கம்

"உத்தரப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி வந்துள்ளது பற்றி எழுந்த இந்த விவாதத்தில், முதலில் ஒன்றைத் தெரிவிக்க விருப்புகிறேன்.

இரண்டு நாட்களுக்குமுன், இந்த உத்தரவைக் கண்டித்து எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்தபொழுது, 'தி. மு. கழகம் அதில் கலந்துகொள்ளவில்லை' என்று ஒரு தவருன செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது

வெளிநடப்பில் தி. மு. கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்; ஆனல், உடனடியாக வரவு-செலவுத் திட்ட மானியமொன்றில், தி. மு. கழக உறுப்பினர் பேசவேண்டியிருந்ததால், வெளியே சென்றவர் உடனே திரும்பி, தம் இடத்துக்கு வந்துவிட்டார்.

வெளிநடப்பு 12-33 மணியளவில் நடைபெற்றது; தி. மு. கழக உறுப்பினர் திரு. கிருட்டினன், 12-34-க்குப் பேச ஆரம்பித்தார்.

வெளிநடப்பு நடந்ததும், உடனடியாகத் தி. மு. கழக உறுப்பினர் அவையில் வந்தது, 'தி. மு. கழகம் வெளிநடப்புச் செய்யவில்லை' என்ற தவருன கருத்தைத் தந்துவிட்டது போலும்!

உத்தரப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி, தக்க காரணமின்றி அமுலாக்கப்பட்டுள்ளது என்பதில், தி மு கழகம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது—இப்பொழுதும் தெரிவிக்கிறது.

### நீண்ட காலக் கேள்வி— விடை தரப்படவில்லை!

சனநாயக முறையைப் பின்பற்றுவதில் எழுந்துள்ள சில அடிப்படைச் சிக்கல்களை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாநில அமைப்பில் கவர்னருக்குள்ள இடம்—அதிகாரம்—பொறுப்பு இவை பற்றிய கேள்விகள் அடிக்கடி எழ ஆரம்பித்துள்ளன; இங்கும் அவை பற்றிய விவாதங்கள் நடைபெற்றுள்ளன.

அமைச்சரவைகளை நீக்கவும், சட்டமன்றங்களைக் கலைக்கவும், இடைத் தேர்தல்களைக் கொண்டுவரவும், கவர்னருக்கு எந்த அளவு தனிப்பட்ட அதிகாரம் இருக்கிறது என்ற கேள்வி, அடிக்கடி நம்முன் வைக்கப்பட்டுள்ளது.

'அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள சிறப்பான அதிகாரங்களை, கவர்னர், தமக்கு விருப்பப்பட்ட முறையில் பயன்படுத்தலாமா' என்ற கேள்வி, நீண்டகாலமாகக் கேட்கப்பட்டு, இன்னும் விடை தரப் டாமல் இருக்கிறது.

### சனநாயக முறைக்கு முரண்பட்டதல்லவா?

இப்பொழுது இந்த அவையின் தலைவராக வீற்றிருக்கும் திரு. கடில்கார் அவர்கள்—காங்கிரசுக்காரர்—நீண்டகால உறுப்பினர்—1965-ல் கேரளத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டபொழுது பேசியதை இந்த அவையின் கவனத்திற்கும், அவரின் நினைவுக்கும் கொண்டுவர விரும்புகிறேன்; அவர் பேசியதாவது:—

"சில வரைமுறைகளைப்பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்தேன். அரசியல் சட்டம் அறிந்த வல்லுநர்களைப் பார்த்து ஒன்று கேட்க நான் விரும்புகிறேன்; கவர்னர் தரும் தீர்ப்பு முடிவானதா? அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தரும் தீர்ப்பு முடிவானதாக இருக்கவேண்டுமா?—இதுதான் இன்றுள்ள சிக்கல்.

"நான் கூறுகிறேன்—'தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் கூடி முடிவு எடுக்கட்டும்' என்று!

"தனிப்பட்ட முறையில் பேசிக் கொண்டிருந்துவிட்டு, கவர்னர் முடிவு எடுப்பது, சனநாயக முறைக்கு முரண்பட்டது என்று நான் கருதுகிறேன்."

இது, காங்கிரசின் முன்வரிசையிலிருந்த திரு. கடில்கார் கூறியதாகும்.

### கவர்னருக்கு என்ன உரிமை இருக்கிறது?

ஓர் அமைச்சரவைக்கு, சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிறதா இல்லையா என்பதை யார் ஆராயவேண்டும்? யார் அதற்குத் தீர்ப்புத் தருபவர்?

சட்டமன்றத்தின் பெரும்பான்மை பலம் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டிய இடம் சட்டமன்றம்—கவர்னர் மாளிகையல்ல! 'ராஜ்பவன'த்தின் அந்தப்புரத்தில் அமர்ந்துகொண்டோ—கவர்னரின் விருந்து மண்டபத்தில் இருந்துகொண்டோ — தனிப்பட்டவர்களை அழைத்துப் பேசுவதாலோ ஒட்டுக் கேட்பதாலோ—விக்கிரமாதித்தனைப்போல் மாறு வேடமணிந்து ஊர் சுற்றிப் பார்ப்பதாலோ சட்டமன்றத்தில் எடுக்கவேண்டிய முடிவுகளை கவர்னர் எடுக்க முடியாது எடுக்கக்கூடாது.

அமைச்சரவைகளை நீக்குவதும் மாற்றுவதும், சட்டமன்றத்தின் உரிமைகளாகும்; அவற்றை கவர்னர் ஆக்கிரமித்துக்கொள்ளக் கூடாது.

### 'இலக்கணம்' என்பது எங்கே இருக்கிறது?

உத்தரப் பிரதேச கவர்னர் தந்த இரண்டு அறிக்கைகளையும் நான் மிக உன்னிப்பாகப் படித்தேன்; அவற்றில் முரண்பாடுகள்—தவறுகள்—குழப்பம் ஆகியவை மலிந்திருக்கக் கண்டேன்.

பிப். 22, ஏப். 10 ஆகிய நாட்களில் இரண்டு கடிதங்கள் கவர்னரிடமிருந்து வந்துள்ளன; அவற்றை வைத்துத்தான், குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கான உத்தரவு வந்துள்ளது.

ஏப்ரல் 10-ம் நாள் கடிதத்தில், இடைக்காலத் தேர்தல் நடைபெறுவதற்கு, இராஜினமாச் செய்த திரு. சரண் சிங் ஆலோசனை கூறியிருப்பதை மேற்கோளாகக் கவர்னர் காட்டியுள்ளார்.

பிப்ரவரி 22-ம் நாளைய கவர்னர் கடிதத்தில், திரு. சரண்சிங் கூறியுள்ள மற்ருென்றும் இருக்கிறது; திரு. சரண் சிங் கூறியுள்ளார்:—

"சட்டமன்றத்தில், சம்யுக்த விதாயக் தளம், இன்னமும் பெரும்பான்மை பலத்துடன் விளங்குகிறது; அதன் புதிய தலைவரை அழைத்து, அமைச்சரவையை அமைக்குமாறு கவர்னர் செய்ய வேண்டும்."

(4-ம் பக்கம் பார்க்க)

# கனக்டிகட் மாநிலத்தில் முதலமைச்சர் அண்ணு

## வேளாண்மைக் கழகத் தலைவரின் பண்ணையில் உபசரிப்பு

### லிங்கன் நிலையத்துக்குச் சென்ருர்— விடுதலைச் சிலையைப் பார்த்தார்

நியூயார்க், ஏப். 23—

நிற வேற்றுமையை ஒழித்து அடிமைகளுக்கு விடுதலை கிட்ட அரும்பாடுபட்டுத் தம் இலட்சியத்துக்காகவே உயிர்த் தியாகம் செய்த மாவீரன் ஆபிரகாம் லிங்கனின் நினைவாக எழுந்துள்ள நிலையத்திற்கு அறிஞர் அண்ணு அவர்கள் சென்ருர்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து அமெரிக்கா விடுவிக்கப்பட்டதன் நினைவாக எழுப்பப்பட்டுள்ள விடுதலை நினைவுச் சிலையையும் அண்ணு அவர்கள் கண்டு களித்தார்கள்.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்கள், கடந்த சனிக்கிழமையன்று மேற்கு நியூயார்க் மாநிலத்திலுள்ள பபல்லோவுக்கு இரயில் மூலம் சென்று, அங்குள்ள நயாகரா நீர்வீழ்ச்சியைக் கண்டுகளித்தார்; அங்கிருந்தபடியே அமெரிக்க நாட்டின் தோற்றத்தையும், கானடா நாட்டின் தோற்றத்தையும் பார்த்தார்.

ராக்பெல்லர் நிறுவனத்திற்கும் லிங்கன் நினைவு நிலையத்திற்கும் அண்ணு அவர்கள் சென்ருர்.

நியூயார்க் துறைமுகத்தில் உள்ள விடுதலை நினைவுச் சிலையையும் பார்வையிட்டார்.

ஞாயிற்றுக்கிழமையன்று, நியூயார்க் மாநிலத்தின் தலைநகரான அல்பானி நகருக்கு அண்ணுவும் அவர்தம் குழுவினரும் விமான மூலம் சென்றடைந்தனர்; அங்கிருந்து மோட்டார் வண்டியில் நியூயார்க் நகரையும், கனக்டிகட் மாநிலத்தின் கிராமப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு கனக்டிகட் மாநிலத்தைச் சேர்ந்த லேக்வில்லியில், திரு. ஜான் பிரிஸ்கோ தம்பதிகளின் பால் பண்ணையில் விருந்தினராக அண்ணு அவர்கள் தங்கியிருந்தார்கள்.

திரு. பிரிஸ்கோ ஒரு முன்னுள் ஆசிரியராவார். இப்போது, கனக்டிகட் மாநில வேளாண்மைக் கழகத்தின் தலைவராக இருக்கிருர்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 11 (23—4—68) செவ்வாய்

# அழுக்காற்றின் அலறல்!

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக இன்று இடம் பெற்றிருக்கின்ற சி. சுப்பிரமணியம் அவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்; வழக்கறிஞராக சில ஆண்டுக்காலம் தொழில் புரிந்தவர்.

அவர் கொஞ்சம் 'முன்கோபி' என, அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் கூறுவர். இக்கூற்றை அவரேகூட ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

அன்பர் ஆச்சாரியார் அவர்கள், காங்கிரசுக் கட்சியின் சார்பில் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில், தமது அமைச்சரவையில், கல்வி அமைச்சராக சுப்பிரமணியம் அவர்களை நியமித்துக் கொண்டார். அது முதற்கொண்டு, காங்கிரசுக் கட்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராகக் கருதப்பட்டு வருகின்றார்.

அன்பர் ஆச்சாரியார் முதலமைச்சர் பதவியைவிட்டு வெளியேறிவிட்ட நேரத்தில், அவருடன் சுப்பிரமணியம் அவர்கள், தாம் பெற்றிருந்த கல்வி அமைச்சர் பதவியைவிட்டு வெளியேறவில்லை; காமராசர் அமைச்சரவையிலும் கல்வி அமைச்சராகத் தொடர்ந்து பொறுப்பேற்றிருந்ததுடன், நிதித் துறையும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அன்பர் ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்தநேரத்தில், 'புதிய கல்வித் திட்டம்' என்ற கல்வி ஏற்பாடு செயலாற்றப்பட்டது. அப்புதிய திட்டத்தை வானளாவப் புகழ்ந்த கல்வி அமைச்சர்—அதை மறந்துவிட்டு—அக் கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதிலும் முனைந்து இருந்தார். இத்தொடர்பில், தாம் இருட்டில் தடுமாறிக் கொண்டிருப்பதாகச் சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாகக்கூட நமக்கு நினைவு.

அதன் பின்னர், 'தமிழகத்தின் அமைச்சர்' என்ற முறையில் சுப்பிரமணியம் அவர்கள், அமெரிக்காவுக்குச் சென்றார்; 'தமிழக அமைச்சர் ஒருவர் அமெரிக்கா போனார்—அந்த நாட்டில் பல நகரங்களைச் சுற்றிப் பார்த்தார்—தமிழகம் திரும்பினார்—'உலகம் சுற்றினேன்' என்றதோர் புத்தகம் எழுதினார்'—என்ற அளவுடன், அவருடைய அமெரிக்கப் பயணம் முற்றுப் பெற்றுவிட்டது.

படித்தவர்—பட்டம் பெற்றவர்—வழக்கறிஞராகத் தொழில் நடத்தியவர்—தமிழகத்தில் அமைச்சராக இருந்தவர்—என்ற தகுதிகளைப் பெற்றிருந்த தன்னுடைய அமெரிக்கப் பயணம், 'அமெரிக்கா போனார்—திரும்பினார்' என்ற அளவுடன் முற்றுப் பெற்றிருப்பதையும், அமெரிக்க அரசாங்க அழைப்பின்மீதும், யேல் பல்கலைக் கழகத்தின் அழைப்பின் மீதும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றிருப்பதையும் சுப்பிரமணியம அவர்கள் ஒப்பவைத்து நோக்குகின்றார்; அவருடைய உள்ளம் எரிமலையாகிவிட்டிருககிறது!

இதே நேரத்தில், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு, இதுவரையில் அமெரிக்கப் பெருந் தலைவர்கள் நீங்கலாக வெளிநாட்டைச் சேர்ந்த எந்தத் தலைவருக்கும் வழங்கியிராத நன்மதிப்பையும், பட்டத்தையும் யேல் பல்கலைக் கழகம் வழங்க விருப்பது, எரிமலையாகிவிடடிருக்கின்ற சுப்பிரமணியம் அவர்களின் உள்ளத்தை வெடிக்க வைத்துவிட்டிருக்கிறது; தாங்கிக்கொள்ள முடியவில்லை அவரால்; கற்பனையாகக் குளறி வழிகின்றார்—அந்தக் கோவைக் கனவான்!

"முதலமைச்சர், அமெரிக்காவுக்கு முகமூடியுடன் போகவிருக்கின்றார் என்பதை நான் விசாரித்துத் தெரிந்துகொண்டேன் (யாரைக் கேட்டு?) டெலிவிஷன் நிகழ்ச்சிகள் இல்லை—பத்திரிகை நிருபர்கள் சந்திப்பில்லை—பொருளாதார நிபுணர்கள் சந்திப்பு இல்லை—என்ற முறையில் அவருடைய சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

"தனி மனிதராக அவர் எப்படி வேண்டுமானலும் போகலாம்; ஆனல், 'தமிழகத்தின் முதலமைச்சர்' என்ற முறையில் அவர் போகிறார். அவருடைய நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவர் எந்த முறையில் தீர்வு காணப்போகின்றார் என்பதை நயக்கு எடுத்துச் சொல்லாவிட்டாலும்கூட, அமெரிக்காவில் எடுத்துச் சொன்னலும் தமிழ்நாட்டின் மதிப்பு உயரும்."

அமெரிக்க அரசாங்க அழைப்பின்மீதுதான் சுப்பிரமணியம் அவர்களும் அப்பொழுது அந்த நாட்டுக்குச் சென்றாரென்றாலும், யேல் பல்கலைக் கழகம் இல்லை என்றாலும், வேறு எந்த ஒரு பல்கலைக் கழகமும் சுப்பிரமணியம் அவர்களை அழைத்திடவில்லை. 'அழைக்கவே இல்லை' என்கின்றபொழுது, 'ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் சிறப்பிப்பது' என்ற பேச்சுக்கே இடமில்லை.

தமக்குள்ள அரசியல் பகை காரணமாகவும், வரைகடந்த அழுக்காற்றின் காரணமாகவும், அறிஞர் அண்ணா அவர்களைத் தமிலும் தாழ்ந்தவராக சுப்பிரமணியம் தீர்மானித்துக் கொண்டிருக்கலாம்; அதன் விளைவாக, அறிஞர் அண்ணா அவர்களின் நாவன்மையையும், அறிவாற்றலையும், அரசியல் குறிக்கோளையும், சுப்பிரமணியம் அவர்களால் உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொள்ள முடியாமல் இருக்கலாம். அண்ணாவின் புலமையையும், உயர்ந்த அரசியல் பண்பையும் அவர் நன்கு உணர்ந்துகொண்டிருந்தால்கூட, அவர்மீது இருந்திடக்கூடிய அழுக்காற்றின் காரணமாக, அவற்றை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவும் பாராட்டவும் சுப்பிரமணியம் அவர்களால் முடியாது என்பதை அனைவரும் அறிவர்.

சுப்பிரமணியம் குறிப்பிட்டிருப்பதுபோல், அமெரிக்காவில் நிருபர்களையும் நிபுணர்களையும் சந்திக்கக்கூடாது என்ற முடிவுக்கு தமிழக முதலமைச்சர் ஏன் வரவேண்டும்? அத்தகைய முடிவுக்கு அண்ணா அவர்கள் வந்துள்ளார் என, சுப்பிரமணியத்திடம் கூறியவர்கள் யார்? அவ்வாறு கூறியவர்களை, 'அத்தகு முடிவுக்கு அண்ணா வருவதற்குக் காரணம் என்ன' என்றல்லவா சுப்பிரமணியம் கேட்டிருக்க வேண்டும்?

அமெரிக்காவில் அண்ணா அவர்கள், நிருபர்கள்—நிபுணர்களை சந்திககப் போகிறாரா இல்லையா என்ற தகவலை, சுப்பிரமணியம் அவர்களிடம் எவரும் வலிய வந்து கூறவில்லை என்பது: 'விசாரித்துத் தெரிந்து கொண்டேன்' என அவரே அறிவித்திருப்பதிலிருந்து உறுதியாகிறது.

அமெரிக்காவில் நிருபர்களைச் சந்திக்கமாட்டார்—முகமூடி அணிந்துகொண்டுதான் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்வார்—என, சுப்பிரமணியம் ஏன் நினைக்கலானார்? இப்படி அண்ணா அவர்களைக் குறித்துக் கூறியிருப்பதிலிருந்தே, அண்ணா அவர்களை மட்டுமே அல்லாது, மற்ற அரசியல் தலைவர்களை மதிப்பிட்டுத் தெரிந்து கொள்ளுவதற்குத் தேவைப்படுகின்ற சராசரி அறிவைக்கூட சுப்பிரமணியம் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகிறது!

தாம் கூறியிருப்பதுபோல், அமெரிக்காவில் அண்ணா அவர்கள் தம் சுற்றுப்பயணத்தின்போது நிருபர்களையும், நிபுணர்களையும் சந்திப்பதில்லை எனத் தீர்மானித்திருக்கின்றார் என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்ட சுப்பிரமணியம்—பொறுப்புடைய காங்கிரசுத் தலைவராக இருந்தால்—என்ன செய்திருக்க வேண்டும்? அங்கு 'அரசியல் தலைவர்களையும், நிருபர்களையும், நிபுணர்களையும் அண்ணா அவர்கள் சந்திக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்' என நல்லெண்ணத்துடன் கூறியிருக்கும்பட்சத்தில், அவர் எப்படிச் செயல்பட்டிருக்க வேண்டும்?

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை தனித்த முறையில் சந்தித்து, 'அரசியல் தலைவர்கள், பத்திரிகை நிருபர்கள், பொருளாதார நிபுணர்கள் ஆகியோரை, அமெரிக்கச் சுற்றுப்பயணத்தின்போது தாங்கள் சந்திக்கப் போவதில்லை எனக் கேள்விப்பட்டேன்; அது, தவறான போக்கு; அப்படிச் சந்திக்காமல் இருந்திடக்கூடாது; அவர்களைச் சந்தித்து, நமது நாட்டின் புகழை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள்' எனக் கூறுவதுதான், பொறுப்புள்ள தலைவரின் கடமையாகும். அதற்கு அண்ணா அவர்களும், 'நீங்கள் பெற்றிருக்கின்ற தகவல் ஆதாரமற்றது' என்ற உண்மையைக் கூறி, சுப்பிரமணியம் அவர்களின் நல்லுரைக்கு நன்றியும் தெரிவித்திருப்பார். அவ்வாறு சுப்பிரமணியம் செயல்பட்டிருப்பாரானால், காங்கிரசு மேடைப் பேச்சுக்களிலிருந்து கிளம்பிக்கொண்டிருக்கும் நெடிநாற்றமும் சிறிதளவு குறைந்திட வழி ஏற்பட்டிருக்கும்.

ஆனல், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரான சுப்பிரமணியம் அவர்களோ, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் அமெரிக்கா செல்லுவதைத் தாங்கிக்கொள்ள முடியாமலும், யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணா அவர்கள் சிறப்பிக்கப்படவிருப்பதை சகித்துக்கொள்ள முடியாமலும் அழுக்காற்றுக்கு அடிமையாகிவிட்டிருக்கின்றார்!

அமெரிக்கப் பயணத்தை அடிப்படையாக வைத்து, 'அறிஞர் அண்ணா அவர்களைத் தூற்றவேண்டும்' என்பதற்காக, 'முகமூடி'க் கதையை சுப்பிரமணியம் கதைக்கின்றார்! காங்கிரசுத் தலைவரின் குரைப்பை, 'அழுககாற்றின் அலறல்' என்றுதான் அறிவுடையோர் மதிப்பர்.

— கா. க.

# போப்பாண்டவருக்கு அடுத்தபடியாக அண்ணா பெற்ற மாபெரும் வரவேற்பு

## பம்பாய் விமான நிலையத்தில் பல்லாயிரவர்கூடி வரவேற்ற காட்சி

### தமிழக முதலமைச்சருக்கு மராட்டியத் தலைநகர் அளித்த சிறப்பு

தமிழக முதலமைச்சரும், தமிழக மக்களின் இதயத்தில் இடம் பெற்றவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள், 'உலகச் சுற்றுப் பயணத்தைத் தொடங்குகிறார்' என்பதைப் பத்திரிகைகளில் பார்த்ததும் பம்பாயில் வரவேற்கவும், வழியனுப்பவும் பம்பாய் கழகத் தோழர்களும்—பம்பாய்வாழ் தென்னக மக்களும், அவர் வந்திறங்கும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தனர்.

பம்பாய்க் கழகத்தின் சார்பில் மாபெரும் வரவேற்பு—வழியனுப்புப் பொதுக்கூட்டம் மாதுங்கா பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; ஆனல், தற்போதைய பம்பாய் சூழ்நிலைக்கொப்ப, அந்த நிகழ்ச்சி நிறுத்திவைக்கப்பட்டது.

பொதுக்கூட்ட வரவேற்பையும் வழியனுப்புதலையும் ஈடு செய்யும் வகையில் விமான நிலையத்திலேயே வரவேற்று, வழியனுப்ப கழக முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

### வியப்பில் ஆழ்ந்தனர்!

ஏப்ரல் 15-ம் நாள் மாலை 4-20 மணிக்கு அண்ணா அவர்கள் வந்திறங்குகிறார்' என்ற தெரிந்திருந்தாலும், பிற்பகல் 1-மணியிலிருந்தே விமான நிலையம் நோக்கி மக்கள் செல்ல ஆரம்பித்தனர்.

தாய்மார்கள் தங்களின் கைக் குழந்தைகளுடன் சென்றது, யாத்திரை செல்வதுபோல் இருந்தது.

பாதுகாப்புத் துறையினரையும், விமானக்கூட அதிகாரிகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது — அங்கு வந்து குழுமிய மக்கள் திரள்!

சுமார் 4-மணியளவில் மாலை அணிவிப்பவர்களின் பெயர்களைக் குறித்து விமானக்கூட முன்வாயிலின் இருமருங்கிலும் வரிசைபடுத்தி நிறுத்தி, முறையாக மாலை அணிவிக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்—தோழர்கள ஆரியசங்காரன், எம். சின்னப்பா, ந. சிதம்பரம், எம். வ. முத்தையா ஆகியவர்கள்.

மக்கள் வெள்ளம் விமானக் கூடம் நிரம்பி, மேற்கொண்டு பெரும் பகுதியினர், விமானக் கூடத்திற்கு வெளியிலேயே நின்று கொண்டிருந்தனர்—மலர் மாலைகளுடனும், கைத்தறி ஆடைகளுடனும்.

ஏப்ரல் 15 அன்றுதான் விமானக் கூடத்திற்குள் பார்வையாளர் பகுதிக்குச் செல்ல நுழைவுக் கட்டணம் (ரூ. 1) செலுத்தும் ஏற்பாடு செயலுக்கு வந்தது; நுழைவுச் சீட்டு வழங்கிக் களைத்துவிட்டனர்—விமானக்கூட நிர்வாகிகள்!

மாலை அணிவிப்பவர்களையும், பார்வையாளர்களையும் ஒழுங்குபடுத்திய முறை, விமான நிலைய அதிகாரிகளும், பிற நாட்டவரும், பாதுகாப்புத் துறையினரும் வியக்கும்வண்ணம் அமைந்திருந்தது.

### மக்களின் ஆர்வம்

விமானம் 4-20 மணிக்கு வந்திறங்கியதும், கூடியிருந்தவர்கள் எழுப்பிய கையொலி கேட்டு விமான நிலையத்தில் கூடியிருந்த பிற நாட்டவர்களெல்லாம் வியப்பில் ஆழ்ந்தனர்.

விமானம் இறங்கிய சிறிது நேரத்தில் கதவுகள் திறக்கப்பட்டன; புன்னகை தவழும் முகத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்கள், முதன்முதலாக விமானத்தைவிட்டு வெளியில் வந்தார். குழுமியிருந்த தமிழக மக்கள் 'அண்ணா வாழ்க' என்று தமிழிலும், கன்னட மக்கள் கன்னடத்திலும், கேரள மக்கள் கேரளத்திலும், ஆந்திர மக்கள் தெலுங்கிலும் முழக்கமிட்டனர்.

அண்ணா அவர்களுடன், செயலாளர் சொக்கலிங்கம், தமிழகச் சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன், சென்னை அட்வகேட்-ஜெனரல் திரு. நாராயணசாமி ஆகியோரும் வந்தார்கள்.

### சிறப்புமிக்க வரவேற்பு

விமானத்திலிருந்து அண்ணா அவர்கள் இறங்கியதும், பம்பாய் மத்தியக் கழகத்தின் சார்பில் தொ. து. அன்புச்செழியன்; தாராவி கிளை சார்பில் த. மு. பொற்கோ, எஸ். தியாகராசன்; இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி நிர்வாகி அமர்நாத், முத்துராமலிங்கத் தேவர்; நகரமன்றச் செயலாளர் வெங்கடாசலபதி ஆகியோர் மலர் மாலையும், சந்தன மாலையும் அணிவித்து வரவேற்றனர்.

விமானக்கூடத்திலிருந்து பார்வையாளர் பகுதிக்கு அறிஞர் வந்தவுடன், மராட்டிய மாநில நிதியமைச்சர் வாங்கடேயும், அமெரிக்கத் தூதுவரக அதிகாரிகளும், மராட்டிய மாநில ஆளுநர் சார்பில் அவருடைய அந்தரங்கப் பாதுகாப்பு அதிகாரிகளும் மாலையிட்டு வரவேற்றனர்.

மாதுங்கா, குர்லா, விக்ரோலி, தானா, பாண்டுப், கெம்பூர், மான்கூர்டு, கொலாபா, கம்பாலா குன்று, பாந்திரா ஆகிய கிளைக் கழகங்களும், எம் ஜி. ஆர். கலைமன்றம், பூனா தமிழ் மன்றம், டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றம், கலைஞர் கருணாநிதி மன்றம், இலக்குமிசால் எம்.ஜி. ஆர். மன்றம், கொலாபா அறிஞர் அண்ணா மன்றம், மகிம் எம்.ஜி.ஆர். மன்றம், தாராவி அண்ணா படிப்பகம், காலகில்லா நாவலர் மன்றம், பூ. ஈணா எம் ஜி ஆர். மன்றம், கே.வி.கே. சாமி படிப்பகம்; மனோகரன் மன்றம், சொகேசுவரி அறிஞர் அண்ணா மன்றம், லேபர் கேம்ப் அண்ணா மன்றம் ஆகியவைகளும், தென் இந்திய முக்குலத்தோர் மகாசன சங்கம், சனநாயக வாலிபர் சங்கம் ஆகிய நிறுவனங்களும், பாண்டுப் சின்னத்தம்பி, திருமயம் தொகுதி தி.மு.க ஆதரவாளர்கள், தோழமை இல்லம்—பாலவாடி லேபர் கேம்ப் சாமிநாதன், பாலைபா, பால் பண்ணைத் தொழிலாளர்கள், என். இராமசந்திரன், விக்ரோலி சேக் மைதீன் ஆகியோரும் பிறரும் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றுச் சூழ்ந்து நின்று வாழ்த்தொலி முழங்கினர்.

அவர்களுக்கெல்லாம் அண்ணா அவர்கள் கையசைத்து நன்றி தெரிவித்து வெளியில் வருவதற்கு 30 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது.

(3-ம் பக்கம் பார்க்க)

# இருப்பதை விரிவுபடுத்தி இல்லாததை உருவாக்குகிறோம்!

"நாங்கள் ஆட்சிக்கு வருவதற்குமுன், 'தேர்தலில் இவர்கள் வெற்றி பெற்றால், இருக்கின்ற பள்ளிக்கூடங்களையெல்லாம் மூடிவிடுவார்கள்' என்று அன்றைய ஆட்சியாளர்கள் கூறினார்கள்; ஆனால், மேலும் மேலும் பள்ளிகளைத் திறந்து கொண்டிருக்கின்ற காட்சியைத்தான் பார்க்கிறோமே தவிர, எதையும் மூடவில்லை! இருந்ததை விரிவுபடுத்தியிருக்கிறோம்—இல்லாததை உருவாக்கி இருக்கிறோம்!

"தண்ணீர் வசதியற்ற கிராமங்களுக்கு, எப்பாடுபட்டேனும் தண்ணீர் அளிக்கத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்!

"இந்த அரசு, கிராம மக்களிடம் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருக்கிற அரசாகும்! 'நாட்டையும், நகரத்தையும் வாழ்விப்பது கிராமங்கள்தான்' என்கின்ற உண்மையை உணர்ந்திருக்கிறது என்பதற்கு அறிகுறியாகத்தான், கிராமச் சீர்திருத்தப் பணிகளும், அதனையொட்டிய விழாக்களும் நடைபெறுகின்றன.

"இதுபோன்ற காரியங்களாலேயே, 'கிராம மக்களின் குறைகள் முற்றிலும் தீர்ந்துவிட்டன; குறையே இல்லை' என்ற எண்ணத்தோடு நாங்கள் நிம்மதியும் மனநிறைவும் பெற்றிடவில்லை!

"நீங்களெல்லாம் அழுக்கற்ற தூய வெள்ளை ஆடைகளை அணிந்து—ஒளியுமிழும் கண்களோடும், பிரகாசமான முகத்தோடும், மலர்ந்த வதனத்தோடும், 'நிம்மதியாக வாழ்கின்றோம்' என்பதை அறிவிக்கும் முறையில் புன்னகையோடிருக்கிறீர்களோ, அந்நாளே எங்களுக்குப் பொன்னாள்! அந்த நிலையை உருவாக்கத்தான் இந்த அரசு விரும்புகிறது!"

**—அமைச்சர் மு. கருணாநிதி**

(சூரப்பட்டு ஊராட்சி வரவேற்பில்)

# வேளாண்மைப் பண்டங்களின் விலைகள் சரிவு

## 'பட்ஜெட்' ஆண்டை மாற்ற டில்லி அமைச்சர் விருப்பம்

புதுடில்லி, ஏப். 22—

"விவசாயப் பொருள்களின் விலை அண்மையில் மிகவும் சரிந்துள்ளன; இந்த நிலைமையை மிகவும் கவனத்துடன் கவனிக்க வேண்டியது அவசியமாகும்"

என்று, மத்திய உருக்கு—சுரங்க அமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி கருத்தறிவித்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

"விலைகள் மிகவும் சரியும்படி அனுமதிக்கக் கூடாது; அவ்வாறு சரிந்தால் விவசாயிகளுக்கு ஊக்கம் குறைந்து உற்பத்தியே பாதிக்கப்படும்.

"'பட்ஜெட்' ஆண்டை மாற்றியமைக்க வேண்டும்; விவசாய உற்பத்தி எவ்வளவு கிடைக்கும் என்று நிதியமைச்சருக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய காலத்தில்தான் 'பட்ஜெட்' அளிக்கப்பட வேண்டும்.

# புஞ்சைப் புளியம்பட்டியில் மகளிர் உயர்நிலைப் பள்ளி

## பி. ஏ. சாமிநாதன் தலைமையில் குழு அமைப்பு

புஞ்சைப் புளியம்பட்டியில் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஒன்று ஏற்படுத்த, திரு. பி. ஏ. சாமிநாதன் எம்.பி. தலைமையில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

1968-ம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே பெண்கள் உயர்நிலைப் பள்ளியை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. பி. ஏ. சாமிநாதன், தமது ஒரு மாத சம்பளத்தை (ரூ. 500) நன்கொடையாகக் கொடுத்து நிதி வசூலைத் தொடங்கி வைத்தார்.

## கரூரில் பொதுக்கூட்டம்

14—4—68 மாலை 6-மணியளவில் கரூர் 15-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் எம். பழனிசாமி தலைமை தாங்கினார்.

தோழர்கள் காளியப்பன், செல்வராசு, தேவராசன், ஆர். மாரிமுத்து ஆகியோர் பேசியபின், தோழர் பரமத்தி சண்முகம் நீண்ட தோழர் உரையாற்றினார்.

# கோசிஜின் இந்தியாவுக்கு வந்ததேன்?

மாஸ்கோ, ஏப். 22—

"'இந்தியாவைப் பொறுத்தமட்டில் சோவியத் கொள்கை, முன்பிருந்ததுபோல் இல்லை' என்று நினைக்கும்படி மேற்கு நாடுகளோ அல்லது மற்ற மூன்றும் தரப்பினரோ கருத்து உண்டுபண்ணுமல் தடுப்பதே இரஷ்யத் தலைமையமைச்சர் கோசிஜின் இந்தியாவுக்குச் சென்றதன் முக்கிய நோக்கமாகும்"

என்று, மாஸ்கோவில் உள்ள சோவியத் வட்டாரங்கள் கூறின.

"கோசிஜின் டில்லியில் சிறிது நேரம் தங்கியது, இரு நாடுகளுக்குமிடையே உள்ள நல்லுறவுகளை மேலும் பலப்படுத்தக்கூடிய ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும்" என்றும் அவ்வட்டாரங்கள் கருத்தறிவித்தன.

"இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே சமாதானம் ஏற்படுவதை சில அந்நிய வல்லரசுகள் விரும்பவில்லை" என்று லாகூரில் ஒரு கூட்டத்தில், சோவியத் தலைமையமைச்சர் கோசிஜின் கூறியதாக 'டாஸ்' செய்தி நிறுவனம் கூறுகிறது.

"ஏகாதிபத்தியவாதிகள், இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே பிளவுகளை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றனர்" என்றும் அவர் கூறினாராம்.

கோசிஜின் மேலும் கூறியிருப்பதாவது:—

"ஆக்கிரமிப்புச் சக்திகள், தென் கிழக்கு ஆசியாவிலும் தமது சூழ்ச்சிகளை நிறுத்தவில்லை; நிலைமைகளை மேலும் கடுமையாக்கி, ஒரு புதிய வாழ்வை அமைத்துக்கொள்ள விடாமல் மக்களின் மனதைத் திருப்பி, நாடுகளிடைகுறிப்பாக இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்குமிடையே பிளவுகளை அதிகமாக்கிக் கொண்டிருப்பதிலேயே அவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

இந்தியா—பாகிஸ்தான் போரின் போது முன்னணி நகராக இருந்த லாகூரில், போரினால் மக்களுக்கு எவ்வளவு பயங்கரப் படுநாசங்கள் விளைந்தன என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை; இம்மாதிரி, மக்களை ஒருவருக்கொருவர் மோதவிடும் முயற்சிகளை சோவியத் யூனியன் உறுதியாக எதிர்க்கிறது."

# கரிவலம்வந்தநல்லூரில் காங்கிரசார் கைவரிசை!

## காவல்துறையினரைக் கண்டதும் ஓட்டம்!

15—4—68 மாலை 4-30 மணிக்கு ஒப்பனையாளர்புரத்துக்கு சைக்கிள் ஊர்வலம் சென்று கொடியேற்று விழாவிலும், சத்தியவாணிமுத்து மன்றத் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டுவிட்டு வந்தவர்களின் சைக்கிள்களை, முகலிங்கபுரத்தில், கரிவலம்வந்தநல்லூர் ஊராட்சி மன்றக் காங்கிரசு உறுப்பினர் ஆதினமிளகியும், நாட்டாண்மை பேச்சி முத்துவும், அவ்வூரைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கு மேற்பட்டோரும் வழிமறித்து அரிவாள்—வேல்கம்பு-தடிக்கம்பு கொண்டு தாக்க வந்தார்கள்.

சைக்கிளில் முதலாவதாக வந்த எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினரை பாலு என்பவர் தூக்கிச் சென்று கொண்டுபோனார்; எல்லோரும் சேர்ந்து அவரை அடித்துக் கொண்டு இருந்தபோது, எம். ஜி. ஆர். மன்றச் செயலாளர் பி. வையாபுரி போலீசு நிலையத்திற்குச் சென்று தகவல் கொடுத்தார்.

காங்கிரசுக்காரர்கள் அனைவரும் அங்கு வந்து வாய்க்கு வந்தபடி பேசி, 'வெட்டுங்கள்' என்று சொல்லித் தாக்க முயன்றார்கள். அந்தச் சமயத்தில் போலீசார் வந்து வந்தனர்; போலீசைக் கண்டதும், அனைவரும் ஓடிவிட்டனர்; பின் தோழர்கள் ஊர் திரும்பினார்கள். திரும்பும் வழியில், சைக்கிள் திரும்ப முடியாதபடி கற்களையும், முட்களையும் போட்டிருந்தார்கள். சைக்கிள் எல்லாம் பஞ்சராகிவிட்டன; மிகவும் சிரமப்பட்டு ஊர் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் தாக்கப் பயன்படுத்திய பலகை—சாட்டைக் கம்பு ஆகியவைகளைத் தோழர்கள் போலீசில் ஒப்படைத்தனர்.

அரிவாள் வேல்கம்பு போன்ற ஆயுதங்கள் வைத்திருந்த காங்கிரசுக்காரர்கள் ஓடிவிட்டனர்.

# சீரணியின் திருப்பணி—

## கழக அரசின் சாதனை

"'சீரணி' என்ற பெயரைக் கேட்டதுமே, 'இது செங்காவலர் படையோ? கட்சியைப் பலப்படுத்தும் படையோ? வன்முறையை உருவாக்கும் படையோ?' என்று ஐயப்பட்டார்கள்!

"ஆனால் இன்றையத்தினம், சீரணியினர், நாட்டின் பல பகுதிகளிலும் எத்தனையோ வாய்க்கால்களை வெட்டியிருக்கிறார்கள்—குளங்களை உருவாக்கியிருக்கிறார்கள் — சாலைகளைப் போட்டிருக்கிறார்கள்—ஏரிகளை மராமத்து செய்திருக்கிறார்கள்!

"சென்னை மாவட்ட சீரணியினர் கட்டி முடித்த பள்ளிக்கூடத்தைப் பார்த்து வியந்த சர்வோதய இயக்கத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், 'மகாத்மா காந்தியடிகள் இருந்தால் இதை வந்து பார்த்து மகிழ்ச்சியடைந்து, அண்ணா அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டு பாராட்டியிருப்பார்' என்றார்.

"சென்னையில் மட்டுமல்ல; சிதறிக் கிடக்கின்ற சிற்றூர் தோறும் சீரணியினர் மிக நல்ல முறையில் காரியமாற்றியிருக்கிறார்கள்!

"இது, புதிய அரசின் சாதனைகளில் ஒன்றாகும்! பல்வேறு முனைகளிலிருந்தும் கிராம நலத்தை நிறைவேற்ற இந்த அரசு முற்பட்டிருக்கிறது!"

**—அமைச்சர் கருணாநிதி**

(சூரப்பட்டு ஊராட்சிமன்ற வரவேற்பில்)

# போப்பாண்டவருக்கு அடுத்த...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா அவர்கள்—பாதுகாப்புடன் — ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுடன் வந்திறங்கிய அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் அன்று மாலையிலேயே டெல்லிக்குச் செல்ல வேண்டியிருந்ததால், தோழர்கள் எஸ். தியாகராசன், அமர்நாத், த மு. பொற்கோ, ஏ.எஸ். பெருமாள், எல். நெல்லைச்செழியன் ஆகியோர் உடனிருந்து அவரை வழியனுப்பிவைத்துவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன் அவர்களுடன் ஆளுநர் மாளிகைக்குச் சென்றனர்.

ஆளுநர் மாளிகையில் கழகத் தோழர்களும், பொதுமக்களும் கூடினர். அறிஞர் அண்ணா அவர்கள், 6-மணியிலிருந்து 6-30 மணி வரையில் கழகத் தோழர்களுடன் இருந்து அளவளாவி மகிழ்ந்தார்கள்.

6-30 மணி முதல் 7-30 மணி வரையில் அமெரிக்க, ஜெர்மன் தூதுவர்களுக்குப் பேட்டியளித்துவிட்டு, இரவு 8-மணி முதல் 8-30 மணி வரையில் ஆளுநர் டாக்டர் செரியன் அவர்களுடன் தனித்து உரையாடினார்கள்.

8-30 மணி முதல் 9-30 மணி வரையில் ஆளுநர் ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்துகொண்டுவிட்டு பின், பிற முக்கியப் பிரமுகர்களுக்குப் பேட்டியளித்தார்கள்.

## முறையீட்டு மனு—நடவடிக்கைக்கு ஏற்பாடு

நள்ளிரவு 1-20 மணிக்கு மீண்டும் விமான நிலையம் வந்தார்; மாலை வரவேற்பில் கலந்து கொண்ட அளவுக்கு அந்த நள்ளிரவிலும் ஆண்களும் பெண்களும் வந்திருந்து வழியனுப்பக் காத்திருந்தனர்.

அண்ணா அவர்கள் விமான நிலையம் வந்திறங்கியவுடன் முக்கியப் பெருமக்கள் தங்கும் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்; அங்கு கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, எல். நெல்லைச் செழியன், ஆரியசங்காரன் ஆகியோர் தென் இந்தியர் சங்கத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட மனுவைக் கொடுத்து, அண்மையில் சிவசேனையினரால் தமிழர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளையும், அதனால் அவதிப்பட்டு—போலீசுக்காரர்களின் மிருகத்தனமான நடவடிக்கைகளுக்கு ஆட்பட்டு சிறையில் வாடுபவர்களின் நிலையையும், ஒன்றும் அறியாத பாமர மக்களின் மீது போலீசார் தொடுத்திருக்கும் வழக்குகளையும் விரிவாக எடுத்துக் கூறினர்.

அண்ணா அவர்கள் இச்செய்தியைக் கேட்டு மிகவும் மனம் வருந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் செழியன் அவர்களிடம் உடனடியாக—நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனைப் பேரும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து இதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கூறினார்கள்; அவரும் ஒப்புக்கொண்டு மனுவின் படி ஒன்றையும் பெற்றுக்கொண்டார்.

## விடைபெற்றார்

விடியற்காலை 2-மணி வரையில் கழகத் தோழர்களுடன் உரையாடியபின் விடை பெற்றுக் கொண்டு, அண்ணா அவர்கள் புறப்பட்டார்கள். அண்ணா அவர்கள் அறையைவிட்டு வெளியே வந்தவுடன், மலர் மாலைகளுடன் கூடியிருந்த பலரும் மலர் மாலை அணிவித்தனர்.

தோழர்கள் சிவன், நடராசன் ஆகியோர் தங்கள் துணைவியருடன் அண்ணா அவர்களுக்கு மலர் மாலை அணிவித்தனர்.

மலர் மாலை அணிவிக்க முயன்றவர்களை ஒழுங்குபடுத்தி, முறையாக அணிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சுமக்க முடியாத அளவுக்கு மலர் மாலைகளைப் பெற்றுக் கூப்பிய கரங்களுடன் புன்முறுவல் பூத்த முகத்துடன், அண்ணா அவர்கள், பம்பாய் விமான நிலையத்திலிருந்து காலை 2-20க்குப் புறப்பட்டார்கள்.

வரவேற்பு நிகழ்ச்சியிலும், வழியனுப்பு விழாவிலும் கழக நிர்வாகிகள் — உறுப்பினர் எஸ். வள்ளி நாயகம், பி. எஸ். செல்லையா, எஸ் சற்குணம்-நெல்லை வளவன்-பீர் முகமது — எஸ் பி. சங்கர், கலைச் செல்வன், குறள்தாசன், தோ. ஈ. செல்லையா, ந. காமராசன், மா. இரா. ஏ. ரெத்தினம், வி. தேவதாசன், சுபகுமார், எம். ஆர். துரை, அப்பாதுரை, தாமசு, செல்வராசு, வி. பழனி, களி, எம். துரைப்பாண்டியன், உ. அ. செல்லையா, எம். இராசகோபால், வீரை. கு. பாலன், வீரை. வே. பரமசிவன், செல்வி. அருள்மொழி மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

வரவேற்பு-வழியனுப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கூட்டத்தைப்பார்த்த விமான நிலைய அதிகாரிகள், 'போப்புக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு அடுத்தபடியாக அளிக்கப்படுகின்ற 'warm Reception' இதுதான்' என்று கூறிக்கொண்டனர்.

அண்ணா அவர்களை வழியனுப்பும் விழாவில் கலந்து கொண்டவர்கள் பெரும் பகுதியினர், தாராவி கிளை உறுப்பினர்களும், பொது மக்களும் என்பது குறிப்பிடத் தக்கது.

வழியனுப்பு விழா முடிந்தபின், தோழர் இரா. செழியன் எம்.பி. அவர்களைத் தோழர்கள் தியாகராசன் ஆரியசங்கரன், பொற்கோ, நெல்லைச் செழியன் ஆகியோர் மீண்டும் சந்தித்து, அறிஞர் அண்ணா கூறிய நடவடிக்கைகளுக்கு உடனடியாக ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்; அவரும், 'டெல்லி போய்ச் சேர்ந்தவுடன் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து பாதுகாப்பு அமைச்சரைக் கண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறினர்.

# ஆசிரியர்களுக்கும் சீருடை

## திட்டத்தை ஆராய அரசு ஆணை

வேலூர், ஏப். 22—

பள்ளி மாணவர்களைப்போல் தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் திட்டம் பற்றி ஆராயத் தமிழக உயர்நிலைக் கல்வி இயக்குநருக்கும், இடைநிலைக் கல்வி இயக்குநருக்கும் ஆணை பிறப்பித்திருப்பதாக தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இங்கு தெரிவித்தார்.

**"மாணவர்கள் மட்டும் சீருடை அணிந்தால் போதாது; மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துகின்ற வகையில் ஆசிரியர்களும் சில மரபுகளைக் கடைபிடிக்கவேண்டும்"**

என்றும் அமைச்சர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

வாலாஜாபேட்டை ஆசிரியர்கள் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

**"இப்படிப்பட்ட நிலையை உண்டாக்க, சீருடைகள் அணிவது முக்கியமான பணியாக அமைந்துவிடும்.**

**"எல்லா ஆசிரியர்களுக்கும் இப்போதே சீருடைகள் வழங்குவது இயலாத காரியமாக இருந்தாலும், இந்தத் திட்டத்தைப் படிப்படியாக இன்னும் 10 ஆண்டுகளிலாவது நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்."**

# நன்றியறிவிப்பு

"13—4—68 அன்று சிவகாசியில் நடைபெற்ற எங்கள் திருமண விழாவிற்கு வந்திருந்தும் வாழ்த்தியும், அன்பளிப்புகள் வழங்கியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் சிறப்புற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்"

என, சாத்தூர் வட்ட தி. மு. க. செயலாளர் எஸ். பி. மணியம் தம்பதிகள் அறிவிக்கிறார்கள்.

# நாடாளுமன்றத்தில் இரா. செழியன் பேச்சு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திரு. சரண் சிங் கூறிய இந்த முதல் ஆலோசனையை கவர்னர் அவர்கள், இரண்டாவது கடிதத்தில் குறிப்பிடவில்லை; ஏனென்றால், 'சட்டமன்றத்தைக் கலைப்பது' என்ற முடிவை அடைய, இந்த ஆலோசனை ஆதாரமாக அமையாததுதான் காரணம்.

சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சி அல்லது கூட்டணி, அமைச்சரவை அமைக்கும் என்பது நாடாளுமன்ற முறையில் உள்ள பொதுவான நியதி, 'பெரும்பான்மை' என்பதற்கு உ. பி. கவர்னர், புதிய விளக்கங்களைக் கண்டுபிடித்துள்ளார்; 'பெரும்பான்மை' என்பது, 'நிலையான பெரும்பான்மை' ஆக இருக்கவேண்டுமாம்.

'நிலையான பெரும்பான்மை' என்றால் என்ன? தமது பிப்ரவரி 22-ம் நாள் கடிதத்தில், கவர்னர் அவர்கள் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்துள்ளனர் :—

"அரசாங்கம் நீடித்து இருக்கவேண்டுமென்றால், அதற்குக் குறிப்பிடத்தக்க அளவு பெரும்பான்மை இருக்கவேண்டும்; சில உறுப்பினர்கள் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குச் சென்றால், அது, அமைச்சரவையைக் கவிழ்க்க முடியாத அளவுக்குப் பெரும்பான்மை இருக்கவேண்டும்.'

ஆக, கவர்னர் கூறுவதிலிருந்து, 'நிலையான பெரும்பான்மை' என்பதற்குத் திட்டவட்டமான ஓர் இலக்கணம் கிடைக்கவில்லை! அவர் கூறுவதெல்லாம், 'ஒரு சில உறுப்பினர்கள் மாறுவதால் பெரும்பான்மை பலம் மாறிவிடக்கூடாது' என்பதுதான்!

## அந்தக் கோட்பாடு காங்கிரசுக்கு விலக்கா?

இந்த 'நிலையான பெரும்பான்மை' என்ற கோட்பாடு, காங்கிரசு அமைச்சரவைகள் அமைந்த நேரத்தில், எந்த அளவுக்குப் பொருந்தி வந்தது என்று கவனிக்க வேண்டும்.

பொதுத் தேர்தலுக்குப் பின், இராஜஸ்தானில் 183 பேர்கள் உள்ள சட்டமன்றத்தில், காங்கிரசு அல்லாத எதிர்க் கட்சிகளுக்கு 93 உறுப்பினர்கள் இருந்தனர்; அந்த 93 உறுப்பினர்களும் நேரடியாக டெல்லிக்கு வந்து குடியரசுத் தலைவர் முன் நின்று, தமது பெரும்பான்மை பலத்தைக் காட்டினர். ஆனால் சட்டமன்றம் அங்கு ஒத்திவைக்கப்பட்டு, திரு. சுகாதியா தலைமையில் காங்கிரசு அமைச்சரவை அமையும் வரை கவர்னர் காத்திருந்தார்!

அமைச்சரவை அமைத்திருந்த பொழுது, திரு. சுகாதியா பக்கம் எவ்வளவு பேர்கள் இருந்தனர் என்றால், 93 பேர்கள் தான்!

183 பேர்களில் 93 பேர்கள் ஒரு பக்கம் என்றால், பாக்கியிருக்கும் 90 பேர்கள் எதிர்ப் பக்கம்; இரண்டு பேர்கள் மாறினால் போதும்—அமைச்சரவை வீழ்ந்துவிடும்!

சுகாதியாவுக்கு இருந்தது 'நிலையான' பெரும்பான்மையா?

இருந்தும், இராஜஸ்தானில் இந்த 'நிலையான பெரும்பான்மை'க் கோட்பாடு அமுல்படுத்தப்படவில்லை! ஏனென்றால், அங்கே அமைந்தது காங்கிரசு அமைச்சரவை!

## 'நிலையான பெரும்பான்மை' எந்த நிலையில் இருக்கிறது?

இந்த நாடாளுமன்ற மக்களவையைக்கூட எடுத்துக்கொள்ளலாமே! மொத்தமுள்ள 523 உறுப்பினர்களில், காங்கிரசுக்கு 282 பேர் உள்ளனர்; 21 உறுப்பினர்கள் அந்தப் பக்கத்தை விட்டு மாறினால் போதும்—அமைச்சரவை கவிழ்ந்துவிடும்!

21 பேர் என்றால், 4 சதவீதம்; இது ஒரு 'நிலையான பெரும்பான்மை' என்று கூற முடியுமா?

இந்த அமைச்சரவையைக் கலைத்து விட்டு, மீண்டும் தேர்தல் நடத்த இவர்கள் தயாரா?

இன்னும் பரந்த அளவில் பார்த்தால்கூட, மொத்த வாக்குகளில் 42 சதவீதம் காங்கிரசுக்குக் கிடைத்துள்ளது. இந்தச் சிறுபான்மை பலத்தை வைத்துக் கொண்டு இவர்கள் ஆளலாமா?

**'நிலையான பெரும்பான்மை' என்ற தத்துவத்தை இவர்கள் இராஜஸ்தானிலும் கடைபிடிக்கவில்லை—இங்கும் கடைப்பிடிக்கவில்லை — காங்கிரசு அமைச்சரவை அமைக்கிற எந்த இடத்திலும் கடைபிடிக்கவில்லை!**

## அமைச்சர்களுக்கெல்லாம் ஆஸ்தான சோதிடர்!

'பெரும்பான்மை' என்பது, நீடித்து எதிர்காலத்திலும் பெரும்பான்மையாக இருக்க வேண்டுமாம்—யார் அதைச் சொல்ல முடியும்—சோதிடக்காரர்தான் சொல்ல முடியும்!

**டில்லியில் உள்ள ஒவ்வொரு பெரிய அமைச்சருக்கும் ஒவ்வோர் ஆஸ்தான சோதிடர் இருக்கிறார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் மாநிலத்துக் கவர்னர்கள், சோதிடர்களாக மாறிவிட்டிருப்பது, இப்பொழுது தெரிகிறது!**

## காங்கிரசுக் கட்சிக்கு மட்டும் விதிவிலக்கா?

'பெரும்பான்மை' என்பதற்கு கவர்னர் வேறொரு விளக்கத்தையும் உண்டாக்கியுள்ளார்; 'பெரும்பான்மை' என்பதில், 'ஒற்றுமையான பெரும்பான்மையாக' அது இருக்க வேண்டுமாம்!

'பெரும்பான்மை' என்று கூறுபவர்கள், ஒற்றுமையாக இருக்க வேண்டுமாம்!

கவர்னரின் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது :—

"உத்தரப் பிரதேசத்துக் கூட்டணியில் உள்ள வேறுபாடுகள் எல்லோருக்கும் தெரிந்ததே; ஒற்றுமையாக இயங்க முடியவில்லை.

"சம்யுக்த சோசியலிஸ்டுக் கட்சியும்—கம்யூனிஸ்டுக் கட்சியும் ஆட்சிப் பொறுப்பில் பங்கு கொள்ள முன்வரவில்லை."

உத்தரப் பிரதேசத்துக் கூட்டணி பெரும்பான்மையாக இருந்த போதிலும், அது, 'ஒற்றுமையான பெரும்பான்மை' அல்ல என்று கவர்னர் கூறுகிறார்.

சரி; இந்தக் கோட்பாட்டை காங்கிரசுக் கட்சி எந்த அளவு கடைபிடித்துள்ளது?

## அமைச்சர்களாக அவர்கள் எப்படி உருவாக்கப்பட்டனர்?

சோஷலிஸ்டுக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும் ஆட்சிப் பொறுப்பில் பங்கு கொள்ளவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்டி, அதை ஒரு குறையாகக் கூறுகிறார்களே—வங்காளத்தில் என்ன நடைபெற்றது? அஜாய் முகர்ஜியின் அமைச்சரவையை கவர்னர் அகற்றிவிட்டு பி. சி. கோஷ் அமைச்சரவையை அமர்த்தினார்; அதற்கு ஆதரவு தந்த காங்கிரசுக்காரர்கள் ஆட்சிப் பொறுப்பில் பங்கு ஏற்றார்களா?—கிடையாது. இவ்வளவுக்கும், சட்டமன்றத்தில் 130 காங்கிரசுக்காரர்கள் இருந்தார்கள்—பி. சி. கோஷ் குழுவினர் 17 பேர்கள்தாம்!

பஞ்சாபில் கூட்டணிக் கட்சிகளின் அமைச்சரவை வீழ்ந்ததும், தளம்—ஜண்டா கட்சிகளின் அமைச்சரவை அமைந்ததும், காங்கிரசுக் கட்சி அதை ஆதரித்ததே தவிர, ஆட்சிப் பொறுப்பில் பங்கு கொள்ளவில்லை.

காங்கிரசுக் கட்சியிடம் 44 உறுப்பினர்கள் இருந்தனர்; தளம்—ஜண்டா கட்சிகளில் 17 பேர்கள் இருந்தார்கள்; காங்கிரசுக்கட்சி அமைச்சரவையில் பங்குகொள்ளாமல் ஆதரவு மட்டும் தந்தனர்; 17 பேர்கள் கொண்ட தளம்—ஜண்டா கட்சியிலிருந்த 17 பேர்களும் அமைச்சர்களாகி விட்டனர்!

## 'ஒற்றுமையான பெரும்பான்மை' தலைமையில் உண்டா?

இதை ஒரு குற்றமாக நான் கூறவில்லை. அரியானாவில் கூட்டணிகளின் அமைச்சரவை அமைந்தபொழுது, சன சங்கம் கூட பங்கு பெறவில்லை. அதை ஒரு குறையாகக் கவர்னர் கூறுவதுதான் வியப்பாக இருக்கிறது!

'பெரும்பான்மைக் கட்சிக்குள் ஒற்றுமையில்லை' என்று கவர்னர் கூறுகிறாரே!

1965-ல் இந்தியத் தலைமையமைச்சர் பதவிக்குக் காங்கிரசுக் கட்சி தமக்குள் தேர்தல் நடத்திய பொழுது, ஒற்றுமை இருந்ததா? —போட்டி வந்தது; இந்திரா காந்தியும் — மொரார்ஜியும் போட்டியிட்டனர்; இரண்டு பக்கமும் பிரிந்து பலமாக வேலை செய்தன; முடிவில் இந்திரா காந்திக்கு 355 வாக்குகளும், மொரார்ஜிக்கு 169 வாக்குகளும் கிடைத்தன. இது ஒற்றுமையாக வந்த தலைமையா?

**'ஒற்றுமையான பெரும்பான்மை' என்ற கோட்பாட்டை அமுல்படுத்தியிருந்தால்—அதிலும் 77 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள இடத்தில் — 355 பேர்கள் தான் இந்திரா காந்திக்கு ஆதரவு என்றால், அந்த அமைச்சரவை கலைத்திருக்கப்பட வேண்டுமே — கலைக்கப்பட்டதா?**

## இயல்புதான்— முறைகேடானதல்ல!

கட்சிக்குள் வேறுபாடுகள் இருப்பதும், போட்டி வருவதும் இயல்பு! பெரும்பான்மைக் கட்சிக்குள்ளேயே ஒரு தலைவர் போய் மற்றொரு தலைவர் வருவது ஒன்றும் முறைகேடான செயலல்ல!

தமிழகத்தில் எவ்வளவு மாறுதல்கள் நடைபெற்றன? முதலில் பிரகாசம் தலைமையில் அமைச்சரவை அமைந்தது; பிரகாசத்தைக் கவிழ்த்துவிட்டு, ஓ. பி. இராமசாமி ரெட்டியார் முதலமைச்சர் ஆக்கப்பட்டார்; பிறகு ஓமந்தூரார் வெளியேற்றப்பட்டு, குமாரசாமி ராஜா முதலமைச்சர் ஆக்கப்பட்டார். இவ்வளவையும் காமராசர் தான் முன்னின்று நடத்திவைத்தார்!

ஆண்டிற்கொரு முதலமைச்சர் மாறியதை, 'நிலையான பெரும்பான்மை இல்லை' என்றோ, 'ஒற்றுமையான பெரும்பான்மை' இல்லையென்றோ, யாரும் அப்பொழுது குறிப்பிடவில்லை.

## ஆபத்தானதோர் அளவுகோல்!

'பெரும்பான்மை' என்பதற்கு, 'நிலையான பெரும்பான்மை' என்றும், 'ஒற்றுமையான பெரும்பான்மை' என்றும் புதுவிளக்கங்களை தந்ததுடன் நில்லாமல், அதற்கு 'ஒருமனதான பெரும்பான்மை' என்று உ.பி. கவர்னர் ஒரு விளக்கம் சேர்த்துள்ளார்.

பிப். 22 தேதியிட்ட கடிதத்தில், 'சரண் சிங் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் போல்', 'இரண்டாவதாக வந்த தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை' என்று கவர்னர் கூறுகிறார்.

'ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கவில்லை' என்பதை, ஒரு குறையாகக் கவர்னர் கருதுகிறார்.

'ஒருமனதாக' என்பது, ஆபத்தானதோர் அளவுகோல்! இதைக் காங்கிரசுத் தலைவர்களே உணர்ந்திருக்க வேண்டும்.

## கலக்கத்தைத் தரும் புதிய தத்துவங்கள்!

1965 சனவரியில், காங்கிரசுத் தலைமையமைச்சர் தேர்தலின் போது, மொரார்ஜி தேசாய் விடுத்த வேண்டுகோளில் உள்ள கருத்தை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன் :—

"பொறுப்புள்ள பதவியில் உள்ளவர்கள், தனிப்பட்ட விருப்பு—வெறுப்புகளைக் கவனிக்காமல், நடுநிலைமை வகிக்கவேண்டும்; அப்படியின்றி, 'ஒருமனதாக முடிவு செய்யவேண்டும்' என்று கூறிக்கொண்டு, தங்களுக்குப் பிடிக்காதவர்களை ஒழித்துக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுவிடுகிறார்கள்!

"'ஒருமனதான தேர்தல்' என்று கூறிப் புதிய தத்துவங்களை உருவாக்கி, சிலர் கூடி, தங்களுக்குப் பிடித்தமானவர்களைத் தேர்ந்தெடுக்கச் செய்யும் முறைகள் எனக்குப் பெரிதும் கலக்கத்தைக் கொடுத்துள்ளன."

இப்பொழுது துணைத் தலைமையமைச்சராக உள்ளவர்—அன்று தலைமையமைச்சர் பதவிக்குப் போட்டியிட்டவரான மொரார்ஜி தேசாய் தந்த கருத்தைக் கூறினேன்......

திரு. சவான் (உள்துறை அமைச்சர்) :—"ஒருமனதாக இருக்க வேண்டும் என்று யாரும் கூறவில்லை."

இரா. செழியன் :—"கவர்னர் தமது கடிதத்தில் அதுபற்றிக் குறிப்பிடவில்லை என்றால், நான் இவ்வளவு சிரமப்பட்டிருக்கமாட்டேன்.

கவர்னரின் பிப்ரவரி 22-ம் நாள் கடிதத்தின் 4-வது பக்கத்தில், 'ஒருமனதாக' என்ற நிலைமையைக் குறிப்பிட்டதுமல்லாமல், அதற்கு ஒரு முக்கியத்துவத்தைத் தர, அந்தச் சொல்லின் கீழ் அழுத்தமான கோடு போட்டும் காட்டியுள்ளனர்.

கவர்னர் கூறுவதை உள்துறை அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். கவர்னரின் அறிக்கைகளை முழுவதும் ஆராய்ந்த பின்தான், குடியரசுத் தலைவரின் ஆட்சியை உள்துறை அமைச்சர் கொண்டு வருகிறார் என்று நான் நினைத்ததால், இதைக் குறிப்பிட்டேன்.

உத்தரப் பிரதேசத்தில் நடைபெறுவது 'ஒரு சனநாயகக் கொலை' என்று கூறப்பட்ட பொழுது, சில காங்கிரசு உறுப்பினர்கள், அந்தச் சொற்களைக் கண்டித்தனர்.

சென்ற ஆண்டில் நடைபெற்ற வங்காளம் பற்றிய விவாதத்தில், துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"அஜாய் முகர்ஜியின் அமைச்சரவைக்குப் பெரும்பான்மை பலம் இல்லை என்பதை கவர்னர் உணர்ந்ததும், உடனடியாக — ஏழு நாட்களுக்குள்—சட்டமன்றத்தைக் கூட்டும்படி முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார். டிசம்பர் 18-ம் நாள் சட்டமன்றத்தைக் கூட்டுவதாக முதலமைச்சர் கூறினார்; ஒரு மாதத்துக்குக் காத்திருக்க முடியுமா? அவ்வாறு ஒரு மாதத்துக்குக் கவர்னர் காத்திருந்தால், அது, அரசியல் சட்டத்தைக் கொலை செய்ததாகும். அந்தக் கவர்னர் பதவியிலிருக்கவே அருகதை இல்லாதவராக ஆகியிருப்பார்!

## இந்தக் 'கொலை'க்கு என்ன பெயரோ?

**மொரார்ஜி தேசாயின் வாதப்படி, மேற்கு வங்காளத்தில் சட்டமன்றத்தைக் கூட்ட கவர்னர் விரும்பினார்; முதலமைச்சர், ஏழு நாட்களில் கூட்ட மறுத்தார்; அது அரசியல் சட்டக் கொலை!**

**உத்தரப் பிரதேசத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்றத்தைக் கூட்டச் சொல்கிறார்கள் — பெரும்பான்மை கட்சித் தலைவர் கூட்டச் சொல்கிறார்; கவர்னர், அதற்கு வழி செய்ய மறுக்கிறார்; இதற்கு என்ன கொலை என்று பெயர்? சனநாயகக் கொலை!**

**சட்டமன்றத்தை ஏழு நாட்களுக்குள் கூட்ட மறுத்த முதலமைச்சர், அங்கு நீக்கப்பட்டார்!**

**ஐம்பது நாட்களாக, அமைச்சரவை அமைய விடாமல்—சட்ட மன்றத்தைக் கூட்டாமல், ஒத்திப்போடும் கவர்னரை ஏன் இன்னும் பதவியிலிருந்து நீக்கம் செய்யவில்லை?"**

## நடக்க இருப்பவை

### 24--4--68

**ஏகாம்பரகுப்பம் (ஆந்திரம்)**

எம் ஜி. ஆர். மன்ற முதலாவது ஆண்டு நிறைவு விழா; மாலை 6-மணிக்கு; தலைவர் : பி. வெங்கடேசன்; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வேலூர் நாராயணன் எம்.சி., டி. கே. கபாலி எம்.சி., சிவய்யா பி.ஏ.பி.எல், எம்.எல்.ஏ. கே. பி. சித்தய்யா பி.ஏ., எல்.எல்.பி., கே. ஜி. முருகேசன், என். பி. வீராசாமி; கொடியேற்றுபவர் : கே. ஜி. பாண்டுரங்கன். (ஊர்வலம் நடைபெறும்.)

**வடுகச்சேரி**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : எஸ். கே. கோவிந்தராசலு; பேசுவோர் : எஸ். தியாகராசன் பி.ஏ.பி.எல்., அ. இராசகோபால், விசய அரங்கன், இரா. தேவராசன். (மணிவண்ணன்—பத்மினி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**தாத்தையங்கார்பேட்டை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு சந்தைத் திடலில்; பொன்மலை ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு: தலைவர் : என். அருணாசலம்; பாராட்டுவோர் : வெ. கண்ணன், ஆ. துரைராசு எம்.பி., து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., எஸ். கே. வடிவேலு எம்.எல்.ஏ., பி. எஸ். முத்துச்செல்வன் பி.ஏ., எம்.எல்.ஏ.

**பேராவூரணி**

நகர தி.மு.க. சார்பில் சோ. சி. மணி எம்.எல்.சி., அவர்களுக்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு வேதாந்தம் அரங்கில்; தலைவர் : வீ. நடேசன்; பாராட்டுவோர் : சித்தமல்லி சோமசுந்தரம் எம்.எல்.ஏ., எம். கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., வி. அருணாசலம், கு. அடைக்கலம், இரா. செங்குட்டுவன், கவிஞர் கலாநேசன், நாடியம் எஸ். இராமையன், கவிஞர் வடிவேல், நாகை வி. எம். வேலு, சோ. கணேசன்.

### 25--4--68

**சென்னை 63-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரியமேடு சாமி பிள்ளை வீதியில்; தலைவர் : கே. முனுசாமி; பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, துணை மேயர் பவளவண்ணன், நீலநாராயணன், மைனர் மோசஸ் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி., பி. டி. நாராயணசாமி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.